**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**
**முன்னிலை திரு.S. ராஜேஷ் கண்ணன், பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்–III , தஞ்சாவூர்,**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு (மு.கூ.பொ)**

**2026ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**குூ.ப.ம.எண். 184/2026**

கோபாலகிருஷ்ணன், வயது 29/2026,
த/பெ. கோவிந்தராஜ்,
எண்.1/42. நரசநாயகபுரம்,
வயலூர், ராமபுரம்,
தஞ்சாவூர் மாவட்டம். ..... மனுதாரர் / வாகன உரிமையாளர்

––எதிர்––

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
திருக்காட்டுப்பள்ளிர் காவல் நிலையம்.
குற்ற எண்.68/2026
U/s. 303(2) BNS
r/w 21(1) of M & M (D & R) Act ... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. நளினி, B.B.A., B.L., அவர்கள் ஆஜராகி வாதுரை கேட்டும், அரசு தரப்பு ஆட்சேபனை குறிப்பை பரிசீலனை செய்தும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழக்கும்.

**உத்தரவு**

1) மனுதாரர் இவ்வழக்கு சொத்தான TN 67 A 5745 என்ற பதிவெண் கொண்ட Bharath Bens Tipper வாகனத்தின் உரிமையாளர். மேற்படி சொத்தானது காவல் நிலையத்தில் வழக்கு தடயமாக உள்ளதாகவும். வழக்கு சொத்தானது வெயிலிலும், மழையிலும் இருந்து வருவதால் அதன் தன்மையை இழக்ககூடிய சூழ்நிலை உள்ளது. வழக்கு சொத்தை தன் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கும் பட்சத்தில் அதற்குரிய ஜாமின் வழுங்கவும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவும் தயாராக இருப்பதாகவும் மனுதாரர் தன் மனுவில் கூறியுள்ளார்.

2) வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பதாலும், மனுதாரர் கோரும் வாகனத்தை மனுதாரரிடம் கொடுத்தால் அதனை அவர் விற்கவோ அல்லது உருமாற்றமோ செய்ய கூடும் என்பதால் மனுதாரருக்கு வழக்கு சொத்தை திரும்ப அளிப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்து எதிர்மனுதாரரால் ஆட்சேபனை குறிப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. மனுதாரர் கோரும் வழக்கு சொத்தானது செயல்படாமல் இருந்தால் அதன் தன்மையையும் மதிப்பையும் இழக்கும் சூழ்நிலை உள்ளது. வழக்கு சொத்தை அரசுடைமையாக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக வழக்கு சொத்து ஒரே இடத்தில் இயங்காமல் இருந்தால் அதன் தன்மையையும், மதிப்பையும் இழக்கும் நிலை உள்ளது. மாண்பமை உச்ச நீதிமன்றம் Sundar Bai Ambalal Vs. State of Gujarat Citation: 2002(10)SCC283 என்ற வழக்கில் சொல்லியுள்ள கோட்பாட்டினை கருத்தில் கொள்ளப்பட்டது. வழக்கு சொத்தை அரசுடைமையாக்கும் நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டியதாக உள்ளது என்பதால், வழக்கு சொத்தை அரசுடைமையாக்கும் அதிகாரியின் அரசுடைமையாக்கும் நடவடிக்கைக்கு உட்பட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் வழக்கு சொத்தான TN 67 A 5745 என்ற பதிவெண் கொண்ட Bharath Bens Tipper வாகனத்தினை மனுதாரரின் இடைக்கால பொறுப்பில் ஒப்படைத்து உத்தரவிடப்படுகிறது.

4) வழக்கு சொத்தினை எதிர்மனுதாரரான காவல் நிலையத்தார் இந்நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பித்த நாளில் இருந்து ஒரு வார காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்திட வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர் ரூ. 15,00,000/–க்கு பிணையப்பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும். மேலும் மனுதாரர் சார்பில் 2 பிணையதாரர் தலா ரூ.15,00,000/– க்கு பிணையப் பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.
2. மேற்படி வழக்கு சொத்தை நான்கு பக்கமும் புகைப்படம் எடுத்து அதில் மனுதாரர் கையொப்பமிட்டு பஞ்சனாமாவிலும் கையொப்பமிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
3. மேற்படி வழக்கு சொத்தை நீதிமன்றமோ அல்லது அரசுடைமையாக்கும் அதிகாரியோ கோரும்போது அதை தற்போது உள்ள உருவ அமைப்பிலேயே ஆஜர்ப்படுத்தவேண்டும்.
4. மனுதாரரோ அல்லது அவரது வகையாட்களோ வழக்கு சொத்தை விற்கவோ, அல்லது வேறு வில்லகங்களுக்கு உட்படுத்தவோ அல்லது வேறு எந்த வித உருமாற்றமோ செய்யக்கூடாது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21–ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–S. ராஜேஷ் கண்ணன்,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.(முசுபொ)